துரிதமாக மாறிச் செல்லும் இன்றைய உலகில்

# முஸ்லிம் பெண்களின் சமூக உறவு

M.A.ஹாஃபிழ் ஸலபி, மன்னர் சௌத் பல்கலைக்கழகம், ரியாத்.

---


- முன்னுரை
- மதிப்புரை
- ஏனைய சமூகங்களில் பெண்களின் நிலை
- இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள்
- பெண்களும் கல்வியும்
- பிரச்சாரப் பணி
- பெண்களும் தொழில் முயற்சியும்
- குடும்ப வாழ்வில் பெண்
- சமூக நடவடிக்கைகள்
- ஆடை


## முன்னுரை

---

சமூக வாழ்வில் பெண்களின் உறவு என்பது மிக முக்கியமானதொரு விசயமாகும். "ஆண்களின் அடுத்த பகுதியினர் - அடுத்த சம பகுதியினர் பெண்கள்" எனும் போது அந்த அடுத்த பகுதியினர் ஒடுக்கப்பட்டு, முடக்கப்பட்டு செயலற்றுக் கிடக்குமானால் சமூக எழுச்சியடைவதும் தாமதமாகும். எனவே, ஆணும், பெண்ணும் சம அந்தஸ்துடையவர்கள் என்ற அவள் சமூக உறவை அமைத்துக் கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. இஸ்லாம் வாழ்வின் சகல துறைகளுக்குமான மிதமான தீர்வை வழங்கும் மார்க்கம் என்ற அடிப்படையில் பெண்ணின் சமூக உறவு பற்றியும் மிகத் தெளிவாகப் பேசுகின்றது.

பெண் எதிர்காலப் பரம்பரையை உருவாக்கும் அதி உன்னத பொறுப்பு வாய்ந்தவள். அவளது உடல், உள இயற்கை அமைப்புக்கள் அனைத்தும் மகத்தான பணிக்கு ஏற்ப அல்லாஹ்வினால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் அவள் வீட்டில் அடைபட்டு ஓர் அடிமையாக முடங்கிக் கிடக்க வேண்டும் என்பதல்ல. அவள் வீட்டை விட்டு வெளியேறி சமூகக் களம், ஏன்? போர்க் களங்கள் வரை கூட செல்வதற்கு இஸ்லாம் அனுமதித்துள்ளது. ஆனால், அவளது வீட்டுப் பணிக்கு அது பாதகமாகக அமைந்து விடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இஸ்லாம் போதனை வழங்குகின்றது.

சமூகக் களம் ஆணின் முதன்மையான பகுதி. வீடு, குடும்பம் என்பன அவனது இரண்டாவது பகுதி. பெண்ணின் முதன்மையான பகுதி வீடும் குடும்பமுமாகும். சமூகக் களம் அவளின் இரண்டாவது பகுதி. இவ்வாறு இஸ்லாம் ஆணின் மீதும் பெண்ணின் மீதும் விதித்துள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் ஆழ்ந்து நோக்கும் போது, மிக அற்புதமானதொரு சமநிலையை ஆண்-பெண், குடும்பம்-சமூகம் என்ற இருவகை அலகுகளுக்கும் இடையே பேணியுள்ளமையைக் காண முடியும்.

சமூக சீர்திருத்த முயற்சியிலும் உழைப்பிலும் பெண்ணின் பங்கைப் பொருத்தவரை மிக அவசியமானது அந்நியர்கள் இஸ்லாமிய நாட்டின் மீது படையெடுத்து நாட்டுக்குள் நுழைந்து விட்டால் அனைவர் மீதும் (ஆண், பெண், சிறுவர், பெரியவர்) ஜிஹாத் கடமையாகின்றது.

எனினும், சமூகத் தீமைகளுக்கு எதிராக பாடுபடுதல், உழைத்தல் என்பது பெண்களுக்கு கடமையல்ல என்ற மனப்பதிவு பரவலாகக் காணப்படுவதோடு மட்டுமல்லாது அவ்வாறு உழைத்தல் பெண்களுக்கு களங்கம் விளைவிக்கும் என்ற எண்ணமும் சமூகத்தில் ஆழமாக பதிந்துள்ளது. இது பற்றி சிந்திப்பதும் இதற்கான இஸ்லாமிய தீர்வு தேடுதலும் அவசியமாகும்.

## மதிப்புரை

இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் பற்றி பல்வேறு நூல்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இந்த வரிசையில் இந்த நூல் சற்று வித்தியாசமாக எழுதப்பட்டுள்ளது. இந்திய - இலங்கை முஸ்லிம் பெண்களின் சமூக நிலையோடு, இஸ்லாத்திற்கு அவர்களது பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும், அதற்கான வழிகாட்டுதல்களை இஸ்லாமிய நிலையோடு இயைந்து வழங்குவதோடு, அதற்குத் தடையாக இருக்கின்ற தடைக்கற்கள் எவை எவை என்பதையும் ஆசிரியர் ஆங்காங்கே தொட்டுக் காட்டுகின்றார். அந்தத் தடைக்கற்களில் முஸ்லிம்களின் ஆணாதிக்க வர்க்கமும் அடங்கும் என்பதை வெளிப்படையாகவே பேசுகின்றார் ஆசிரியர்.

எனவே, இந்த நூல் முஸ்லிம் பெண்களின் இன்றைய நிலையோடு, அவர்களது சீர்திருத்தம், இஸ்லாம் அவர்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் மற்றும் மாற்றுமத பெண்களோடு முஸ்லிம் பெண்களின் நிலை எவ்வாறு வேறுபட்டது, அதிலும் அதிக உரிமைகள் உடையது என்பதையும் ஆசிரியர் ஆதாரங்களுடன் தொட்டுக் காண்பிக்கின்றார்.

ஆணும் பெண்ணும் சமம் எனும் கோட்பாட்டிற்கான இஸ்லாமிய வரையறை பற்றியும், இன்னும் இஸ்லாமிய அழைப்புப் பணியில் அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும், சமூக ஆதரவின்றி அவற்றை அவர்களால் நிறைவேற்ற இயலாத என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆசிரியரின் இந்த முயற்சிக்கு நல்ல பலனை வழங்குவதற்கு இறைவன் துணை புரிவானாக என்றும், இன்னும் இது போல ஏராளமான நூல்களை அவர் வெளிக் கொணர வேண்டும் என்றும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு

தமிழ்இஸ்லாம்.காம் - சகோதரர்கள்.

## ஏனைய சமூகங்களில் பெண்களின் நிலை

இஸ்லாத்தின் நிழலில் பெண்களின் சமூக உறவை ஆய்வுக்கு உட்படுத்த முன்னர் பெண்களை மற்ற சமூகத்தினர் எவ்வாறு நடத்திக் கொண்டிருந்தார்கள் என்று புரிந்து கொள்வது இஸ்லாத்தில் பெண்களின் மாண்பை மட்டிட இலகுவாக இருக்கும்.

கிரேக்கர்கள் பெண்களை விற்பனைப் பொருட்களாகவே கருதினர். அவர்களுக்கென எந்த உரிமையும் கிடையாது. உரிமைகள் அனைத்தும் ஆண்களுக்கே என்றனர். அங்கு பெண்களுக்கு சொத்துரிமை,

கொடுக்கல் வாங்கல் போன்ற உரிமைகள் தடுக்கப்பட்டிருந்தன. அவர்களில் பிரபல்யமிக்க விஞ்ஞானியான சாக்ரடீஸ் என்பர், “பெண்கள் இருப்பது உலகின் மிகப் பெரிய அழிவிற்கு மூல காரணம். நிச்சயமாக பெண்கள் விஷ மரத்திற்கு ஒப்பானவர்கள். அம்மரத்தின் புறத்தோற்றம் அழகாக இருக்கிறது என்றும், அதிலுள்ளதை சிட்டுக் குருவிகள் சாப்பிட்டவுடனேயே மரணித்து விடுகின்றன” என்றார்.

பெண்களின் விசயத்தில் இந்தியர்களின் கண்ணோட்டம் இவ்வாறு தான் இருந்தது. கணவன் மரணித்து விட்டால் அவனோடு சேர்த்து அவனது மனைவியையும் எரித்து விடுவார்கள். இதற்கு ‘உடன்கட்டை’ ஏறுதல் எனப்படுகிறது. சீனர்கள் பெண்களை விற்கவும், உயிரோடு எரிக்கவும் செய்தனர்.

யூதர்கள் பெண்களை சாபத்துக்குரியவர்கள் என கருதினார்கள். ஏனெனில், அவள் ஆதம் (அலை) அவர்களை வழிகெடுத்து தடுக்கப்பட்ட கனியை சாப்பிடச் செய்தாள் என்று எண்ணினர். பெண்ணிற்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டால், வீட்டையும் பாத்திரங்களையும் அவள் தொட்டால் அசுத்தமாகி விடும் என்று கருதி ஒதுக்கி வைத்தனர்.

கிறிஸ்தவர்கள் பெண்ணை ஷைத்தானின் Agent எனக் கருதினார். கிறிஸ்தவ பாதிரியொருவர், “பெண் மனித இனத்தைச் சேராதவள்” எனக் கூறினார். செம்பூனா, பென்தாரா என்ற கிறிஸ்தவன் “நீங்கள் பெண்களைக் கண்டால் அவளை மனித இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதி விடாதீர்கள். அவளை ஓர் உயிருள்ள ஜீவனாய்க் கூடக் கருதாதீர்கள். நிச்சயமாக நீங்கள் காண்பது ஷைத்தானின் உருவத்தைத் தான். இன்னும் நீங்கள் செவியேற்கும் சத்தம் பாம்பின் சீற்றம் தான்” என்றான்.

19 ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஆங்கிலேயர் பொதுச் சட்டப்படி பெண்கள் பிரஜா உரிமை கொடுக்கப்படாதவர்களாகவே இருந்தனர். இது போன்றே பெண்களுக்கு எந்தவித மனித உரிமைகளும் கிடைக்கவில்லை. அவள் அணியும் ஆடை உட்பட எந்தப் பொருளையும் சொந்தப்படுத்திக் கொள்ள உரிமை வழங்கப்படவில்லை.

1567ம் ஆண்டு ஸ்காட்லாந்துப் பாராளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக் கூடாது என்று சட்டமியற்றியது. இவ்வாறே 8 வது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேயப் பாராளுமன்றம் பெண்கள் அசுத்தமான இருப்பதர் பிஞ்சிலே படிப்பது கூடாது என்று சட்டமியற்றியது. பிரஞ்சு நாட்டவர் 1586 ம் ஆண்டு பெண்கள் மனித இனத்தை சார்ந்தவர்களா இல்லையா என ஆய்வு செய்து முடிவெடுக்க ஒரு சபையை அமைத்தனர். 1805ம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் சட்டத்தில் ஒரு கணவன் தன் மனைவியை விற்பது கூடும் என்றே உள்ளது. மேலும், மனைவியின் விலையை 6 பென்ஷி, அரை ஷிலின் (ஆங்கிலேயே நாணயத்தின் பெயர்) என்று நிர்ணயித்தார்கள்.

இஸ்லாத்திற்கு முன்பு வரை பெண்கள் புண்களாக எண்ணப்பட்டு இழிவான ஈனப் பிறவிகளகாக இதயமற்ற மாமிச பிண்டங்களாக கருதப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். பெண் பிள்ளை பிறந்தால் உயிரோடு புதைக்கப்பட்டார்கள். இவ்வாறு அகிலம் முழுவதும் பெண்ணினத்திற்கு அளிக்கப்பட்டு வந்த கொடூரங்கள் எண்ணிலடங்காதவை. இவை அனைத்து அநியாயங்களை விட்டும் பெண்களை பாதுகாக்க இஸ்லாம் வருகை தந்தது. பெண் குழந்தை பிறந்ததை நற்செய்தி என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது. எனினும், அறியாமைக்கால மக்கள் அதனை அபச் செய்தியாகவே கருதினார்கள்.

“அவர்களில் ஒருவருக்கு பெண்குழந்தை பிறந்துள்ளது என்று நன்மாராயம் கூறப்பட்டால் அவன் முகம் கறுத்து விடுகின்றது. அவன் கோபமுடையவனாகின்றான்.” (16:58)

## இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள்

பெண்கள் பற்றிய எண்ணக் கரு சமூகநிலை மிகுந்த கருத்து வேறுபாட்டையும் அதி தீவிர கொள்கையையும் அடக்கிய பிரச்னையாகும். எனினும், இஸ்லாம் சமநிலை பண்பு கொண்ட கொள்கை என்ற வகையில் எத்தகைய தீவிர நிலையையும் அது தன் அடிப்படைக் கொள்கைகளிலோ வணக்க வழிபாடுகளிலோ சமூக நடைமுறைக்கான சட்டங்களிலோ கொள்வதில்லை.

பெண்ணை நிச்சயமாக ஆணாகவே பாவிக்கும் சிந்தனையிலும், பெண்ணை அனுபவிக்கும் பொருளாக மட்டும் இது போன்ற பல்வேறு தீவிர நிலைகளிலும் இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. ஆனால், நவீன காலப் பிரிவில் பெண்களை ஆணாகவே பாவிக்கும் இயந்திர சிந்தனை வலுப்பெற்று சமூகங்கள் அனைத்திலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றன.

உரிமைகளிலும், சட்டங்களிலும் இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தியிருந்தது.

“மனிதர்களே நிச்சயமாக நாமே உங்களை ஓர் பெண்ணில் இருந்து படைத்தோம்” (49:13)

இஸ்லாத்தில் ஆண் பெண் சமத்துவம் என்பது உண்மை. பெண்ணை எல்லா விதத்திலும் ஆணை விட தாழ்த்திப் பார்ப்பது அவள் மீது இழைக்கப்படும் அநீதி என்பதில் சந்தேகம் இல்லை. எனவே. ஆணையும், பெண்ணையும் ஒரே இனமாக பார்க்க வேண்டும். பெண்ணை ஒரு மோகப் பொருளாகப் பார்ப்பது மனித அந்தஸ்தை விட்டு தாழ்த்துவது ஒரு பெருங்குற்றம். அவள் மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கு மூலமாக அமைவது இதுவே. அதேவேளை ஆணையும், பெண்ணையும் எந்தவித்தியாசமும் அற்ற ஒரே இனமாக காண முனைவதும் பெண்மீது அநியாயங்கள் இழைக்கப்பட காரணமாக அமைந்து விடுகிறது. நவீன கால மேற்கத்திய பெண்களின் வாழ்வு இதற்கு முதன்மையான உதாரணமாகும். இவ்வாறான நிலைகளுக்கிடையே இஸ்லாம் வழமை போல் நடுநிலையான சிந்தனையையே முன் வைக்கிறது. இருவருக்கும் சம அந்தஸ்தை கொடுக்கும் இஸ்லாம் சமூக வாழ்வில் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி வாழ்வது அவசியம் எனக் காண்கிறது.

ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி ஈமான் கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கின்றார்களோ இவர்கள் சுவனபதியில் நுழைவார்கள். இன்னும் அவர்கள் கடுகளவும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்” (4:124)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹு த்தஆலா உங்கள் உருவங்களையோ செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும் செயல்களையும் பார்க்கின்றான். (ஆதாரம் : முஸ்லிம்)

மேலும் நபிமொழியொன்று பின்வருமாறு பேசுகின்றது. முஃமின்களில் பூரண ஈமான் உடையவர்கள் அவர்களில் அழகிய குணமுடையவர் உங்களில் சிறந்தவர் தனது மனைவியிடத்தில் சிறந்தவர்கள்.

“உலகம் மிக இன்பமானது. அந்த உலக இன்பத்தில் மிகச் சிறந்தது நல்லொழுக்கமுள்ள மனைவியாகும்.”

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து “மனிதர்களில் நான் அழகிய பண்புடன் நடந்து கொள்ளக் கூடியவர் யார் என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள் தாய் என்றார்கள். பின்பு யார் என்று கேட்டார். உனது தாய் எனக் கூறினார்கள். பின்பு யார் எனக் கேட்டார். உனது தாய் எனக் கூறினார்கள். பின்பு யார் எனக் கேட்டார். உனது தந்தை என்றார்கள்.”

இவை பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும். எனவே. ஒருவரையொருவர் பூரணப்படுத்தும் இரு சமூக அலகுகளே ஆணும், பெண்ணும் என்பதே இஸ்லாத்தின் கருத்தாகும்.

“கணவர்களுக்கு பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று முறைப்படி அவர்கள் மீது பெண்களுக்கும் உரிமை உண்டு.”

கூலி தண்டனை வழங்குவதில் இஸ்லாம் சமமாகவே பார்க்கிறது. ஆணைப் போலவே ஷரீஆ விசயங்களில் பெண்ணும் பொறுப்புமிக்கவர். செல்வம் சேகரிப்பதற்கு, கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் கருத்து வெளியிடவும் அவளுக்குப் பூரண உரிமை உண்டு.

இந்த வகையில், இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமைகளைப் போன்று வேறு எந்த மதமோ நாகரீகமோ வழங்கியதை காண முடியாது. வாரிசுச் சொத்தில், தனக்கு ஏற்ற கணவனை தெரிவு செய்வதில், ஏன் தனக்குப் பொருத்தமின்றேல் கணவனிடத்தில் விவாகரத்து கோருதல் போன்ற அம்சங்களில் அவர்களுக்குரிய உரிமைகளை இஸ்லாம் வழங்குகின்றது.

## பெண்களும் கல்வியும்

அறிவு தேடுவதைப் பொறுத்தவரை அது ஒவ்வொரு முஸ்லிம் ஆண்-பெண் மீதும் கடமையாகும்.

“கல்வியைத் தேடிக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.” (ஆதாரம் : பைஹகி)

அறிவீனத்தை இஸ்லாம் பெண்ணின் மீது திணிக்கவில்லை. ஆண்கள், பெண்களிடம் சென்று கல்வி கற்ற காலமொன்று இருந்தது என்று நாம் மறுக்க முடியாது. ஆண்கள், அன்னை ஆயிஷா (ரலி) அன்னை உம்முஸலமா (ரலி) அவர்கள் போன்று அறிவிற் சிறந்த பெண்களிடம் சென்று நபிமொழிகளை கேட்டறிந்து கொண்டனர். இஸ்லாத்துடன் தொடர்பான பல அம்சங்களை அவர்களிடம் கற்றனர். பெரிய ஸஹாபாக்களும் தாபியீன்களும் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேள்வி கேட்டுள்ளனர். அவர்களது கேள்விகளுக்கு கச்சிதமான பதிலளித்ததோடு மூத்த ஸஹாபாக்கள் தவறிய இடங்களை சுட்டிக்காட்டி திருத்தியும் உள்ளார்கள். இவ்வாறான நிலைகளை இன்று காண்பது அரிதிலும் அரிது.

எனினும், அண்மைக்காலங்களில் முஸ்லிம் பெண்கள் படிக்க ஆரம்பித்து பல்கலைக்கழகங்கள் வரை அவர்களின் படிப்பை தொடர்ந்து வைத்தியத்துறையிலும் கூட பங்களிப்பு செய்கின்றார்கள். எனினும், “பெண் என்பவள் சமூகக் காரியங்களில் ஈடுபடத் தகுதியற்றவள், பலவீனமான உள்ளம் படைத்தவள், குடும்ப வாழ்வின் சட்டங்களுக்காக மட்டும் படைக்கப்பட்டவள்” என்ற ஆழ்மனப் பதிவு படித்த பெண்களிடம் கூட மண்டிக் கிடக்கிறது. அதிகமான பெண்களுக்கு தனது பாடங்கள், தேர்வு, குடும்பம், தொழில் இவற்றுக்கு வெளியில் எதுவுமே தெரியாத நிலையில் உள்ளது. இதன் விளைவாக அவர்கள் எத்தகைய சமூக பிரக்ஞையும் அற்றவர்களாகவே உள்ளனர்.

இந்திய இலங்கை பெண் சமூகத்தைப் பொருத்தவரை முன்னுக்குப் பின் முரண்பட்ட வாழ்க்கை முறை ஒன்றை அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. உலக வாழ்வு, ஆன்மீக வாழ்வு என்ற அர்த்தமற்ற பிரிவுக்குள் அவஸ்தைப்படுகிறாள். இதனால் பெண்ணை ஒரு பக்கத்தால் திறந்து விட்டு, இன்னொரு பக்கத்தால் முழுமையாக இறுக்கி மூடியும் பூட்டியும் வைக்கப்பட்டுள்ளது.

எமது பெண் சமூகத் தளத்தில் உலகக் கல்வி, உலகின் ஏனைய செயல்கள் அனைத்தையும் எந்தக் கட்டுப்பாடும் இன்றி அனுமதிக்கப்பட்டுள்ளது. பாடசாலையிலும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் பர்தா அணிந்தோ அணியாமலோ செல்லலாம். அங்கு அந்நிய ஆண்களுடன் எப்படியும் பேசலாம், பழகலாம், சிரிக்கலாம், கும்மாளமடிக்கலாம். இங்கு ஆண்-பெண்

இருசாராரும் கலந்து சுற்றுலா செல்லலாம். அதேபோல் தொழிலுக்கு எப்படியும் போகலாம். ஆனால், துர்பாக்கியம் என்னவென்றால் அவள் மஸ்ஜித் படிக்கட்டை மிதிக்கக் கூடாது.

அதேவேளை, மார்க்கப் பகுதியில் தஃவா-அழைப்புப் பணியில் பெண்ணின் பங்களிப்பு மிகக் குறைவு. அவர்களுக்கு மத்தியில் தான் மார்க்கம் பற்றிய அறியாமை மூடநம்பிக்கை மலிந்து காண்பபடுகிறது என்பது யாரும் இன்று மறுக்க முடியாத உண்மையாகும். பள்ளி என்ற உன்னதமிக்க மிக உயர்ந்த சமூக நிறுவனத்தோடு எந்த தொடர்பும் முஸ்லிம் பெண்களில் பெரும்பாலோரிடம் கிடையாது. நோன்பு கால இரவுத் தொழுகை, பெருநாள் தொழுகைகள் என்பன பெண்களுக்கு அதிக இடங்களில் தனியாகவே தொழுவிக்கப்படுகின்றது. அதுவும் கனத்த திரைகளுக்குப் பின்னால் அவர்கள் நிறுத்தப்படுகின்றார்கள். ஒரு மார்க்க உபதேசம், மார்க்க வகுப்பு என்பன திரையின்றி நடந்தால் அதைத் தடுக்கவும் எதிர்க்கவும் பலர் உள்ளனர். இப்படி ஓர் அர்த்தமற்ற முரண்பாடான வாழ்வு முறையாகவே பெண்ணின் நிலை காணப்படுகின்றது. இந்நிலை இன்று ஓரளவு மாறி வருகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை. கல்வி ரீதியாக பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை ஒழித்து அவர்களுக்கு கல்விச் சுதந்திரத்தை பெற்றுக் கொடுப்பதற்காக எமது பங்களிப்பை வழங்குவதற்கு நாம் முன்வர வேண்டும்.

ஆரம்ப காலத்தில் பெண்கள் அறிவுப் பணிகளை மேற்கொண்டு வந்தாகள். பிற்போக்கான வீழ்ச்சிக் காலத்திலே தான் அவள் சமூகக் களத்தில் இருந்து ஒதுக்கப்பட்டாள். "மேற்குலகப் பெண் ஆய்வு செய்வதற்காக சந்திரனுக்கே சென்று வந்து விட்டாள். ஆனால், நமது ஆலிம்களில் பலரும் சமூகப் பொறுப்புள்ளவர்களில் பலரும் அவள் பள்ளிவாசலுக்குள் செல்வது 'பித்னா' என்று கூறிக் கொள்கின்றார்கள். இதைவிட அவளை ஓர் இருட்டறைக்குள் பூட்டி வைப்பது சிறந்தது. அதேபோல் இந்துப் பெண் கோயிலுக்குச் செல்கின்றாள். பௌத்தப் பெண் விகாரைக்குச் செல்கின்றாள். கிறிஸ்தவப் பெண் தேவாலயங்களுக்குச் செல்கின்றாள். ஆனால், முஸ்லிம் பெண் பள்ளிவாசலுக்கு செல்வதைப் பழமைவாதிகள் அனுமதிப்பதில்லை. ஆனால் இஸ்லாம் இவ்வாறு கூறவில்லை.

எனவே, இஸ்லாமியப் பெண்களின் சமூக உறவில் கல்வி ஆளுமை குறைகிறது. அதனைப் போக்க அவள் கல்வி கற்க வேண்டும். தனது இயல்பான வரையறைகளையும் தனது தொழிற்பாட்டின் வரையறைகளையும் கவனத்தில் கொண்டு அவள் கல்வித்துறையில் ஈடுபட வேண்டும். அந்த வகையில் இஸ்லாமியப் பெண்களைப் பொருத்தவரை அவர்களுக்கு நான்கு முக்கியப் பணிகள் காத்திருக்கின்றன.

- ஓர் உண்மையான இறைவிசுவாசியாக - முஃமினாக, இறைஉவப்பைப் பெற்ற பெண்ணாக வாழ்வதற்குத் தேவையான இஸ்லாமிய அறிவையும், ஆன்மிகப் பயிற்சியையும் அவள் பெற்றுக் கொள்ள வேண்டும், முழுமையாக உழைக்க வேண்டும்.
- தான் கற்றவற்றை செயற்படுத்த வேண்டும்
- பெண் சமூகத்திற்கு இஸ்லாமிய அழைப்பை - தஃவாவை மிகச் சரியாகவும், தெளிவாகவும் முன்வைத்து ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தகுதியுடையவளாக அவள் தன்னை தகவமைத்துக் கொள்ள வேண்டும்
- பிரச்சாரப் பணி புரியும் போது ஏற்படும் இன்னல்களை சகித்துக் கொள்ளும் உள்ளத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் முந்தைய தலைப்பில் பெண் கல்வியை நோக்கினோம். இஸ்லாம் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதை இருபாலாரின் சமூகக் கடமை என்பதினூடாக மேலும் கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக உணர்த்துகிறது. பிரச்சாரப் பணிக்காக களத்தில் நுழையும் போது தான் ஏவப் போகும் நன்மையைப் பற்றிய அறிவும் தடுக்கப் போகும் தீமையைப் பற்றிய அறிவும் கண்டிப்பாக இருக்க வேண்டும். எனவே மார்க்கக் கல்வி அவசியமாகின்றது.

**"முஃமினான ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலக்குகிறார்கள்.."** (9:97)

இஸ்லாம் இன்று இறுக்கமான நெருக்குதலுக்கு உட்பட்டு முழு முஸ்லிம் உம்மத்தும் அபாயத்தில் வாழ்கிறது. இந்நிலையில் நன்மையை ஏவி தீமையைத் தடுத்து இஸ்லாமிய 'தஃவத்தில்-அழைப்பில்' அற்பணத்தோடு ஈடுபட்டு இஸ்லாமிய 'ஷரீஅத்' ஆளுகின்ற வாழ்க்கை முறையை மீண்டும் தோற்றுவிப்பது இன்றைய நிலையில் ஆண்கள் பெண்கள் இருசாரார் மீதுள்ள பெரும் கடமையாகும். இதில் பெண்ணுக்கு ஒரு பெரும் பங்களிப்பு உள்ளது.

எனவே, அவள் வீட்டை விட்டு வெளியேறி இஸ்லாமிய தஃவா-அழைப்பில் ஈடுபடுவது அவளது கடமையாகிறது. இதற்காக கணவன் அவளை அனுசரிப்பது அவனுக்குக் கடமையாகிறது. அப்போது தான் முழுமையான இஸ்லாமிய சமூகத்தின் அடுத்த ஒரு பகுதியாக விளங்கும் பெண்கள் சமூகமொன்றை தோற்றுவிப்பது சாத்தியமாகும்.

இஸ்லாமிய தஃவா என்ற முக்கிய இஸ்லாமிய கடமைக்காக வீட்டை விட்டு பெண் வெளியேறிச் செல்வது அவசியமாகின்றது என்பதை இஸ்லாமிய வரலாற்றினூடாக அறிய முடிகின்றது. நபி (ஸல்) அவர்களின் ஆரம்ப கால வாழ்க்கையிலும் பெண்கள் அழைப்புப் பணி செய்துள்ள பங்களிப்புகளை இஸ்லாமிய வரலாற்றில் நிறைய காணலாம். அந்த வகையில் அன்னவர்களது அன்பு மனைவியான அன்னை கதீஜா (ரலி) அவர்களின் பங்களிப்பு மகத்தானது. ஏனையவர்களின் பணியும் நிறையவே உண்டு என்பதும் நன்றியோடு நினைவு கூறத்தக்கது.

அதேபோல் மதீனாவில் கல்வி ஆளுமையுடனும், வீர உணர்வுடனும் பெண்கள் வளர்க்கப்பட்டார்கள். அங்கே பெண்கள் சல்நது கொள்ளாத, பங்களிப்புச் செய்யாத எந்தப் போரும் இருக்காது என்று கூறுமளவும் அவர்களது பங்களிப்பு இருந்துள்ளது. இஸ்லாமிய வரலாற்றில் மின்னிடும் தாரகைகளாக மங்கையர்களின் பங்களிப்பு இன்று வரை தொடர்கின்றது. நமது சமகாலத்தில் எகிப்தின் ஆயிஷா அப்துர் ரஹ்மான் பின்து ஷாதிஃ என்ற பெண்மணி தஃப்ஸீர் துறையில் பங்களிப்புச் செய்துள்ளார். இதேபோல் ஏனைய பல துறைகளிலும் பல பெண்கள் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

எனினும், இஸ்லாமியப் பணி என்ற போர்வையில் புறமும், அர்த்தமற்ற பேச்சுக்கள் நிறைந்த கூட்டங்களுக்காக வீட்டிலிருந்து வெளியேறுவது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். பெண்கள் தேவையற்ற கேளிக்கைகளுக்காக வெளியேறுவது கண்டிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய அழைப்புப் பணி ஓர் அமானிதம். ஒரு தூதைச் சுமந்து செல்கின்ற மகத்தான பணி என்பது உணரப்பட வேண்டும். இந்த தூதை சுமக்கின்ற தகுதியும் பண்பட்ட பெண்களிடம் காணப்பட வேண்டும்.

பெண், தனது முதற்பணி வீட்டுக்கடமைகள் என்பதை மனத்திருப்தியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். வீட்டை விட்டு வெளியேறும் போது அல்லாஹ்வை திருப்திப்படுத்தும இன்னொரு கடமையை நிறைவேற்றவே செல்கின்றேன் என்ற மன உணர்வோடு அவள் வெளியேறிச் செல்ல வேண்டும். சமூக நலப்பணிகளுக்காக அவள் ஒழுக்க சீலத்துடன் செல்வதற்கு அவளின் பொறுப்பாளர்கள் (தந்தை

அல்லது கணவன்) அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அவள் வெளியேற அனுமதிப்பது உரிமை உடையவர்களின் கடமையும் கூட என்பதை எமது சமூகம் உணர்ந்து கொள்ளுமா? இதை உணரச் செய்ய எமது பங்களிப்பு என்ன என்பது பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

## பெண்களும் தொழில் முயற்சியும்

மேற்கின் சமூக அமைப்பின் பெண்களே தங்களது பொருளாதார தேவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை காணப்படுகின்றது. ஆண், பெண் என்ற இயல்பு பற்றிய அவர்களது பிழையான மதிப்பீடுகளும் நடவடிக்கைகளுமே இதற்கான காரணமாகும். மேற்கில் பெண் ஒருத்தியின் செலவினங்களை ஈடு செய்ய வேறு வழிகள் காணப்படுவதில்லை என்பதால் உழைப்பதற்கு அவள் நிர்ப்பந்திக்கப்படுகிறாள். இதனால், வாழ்வின் எல்லா துறைகளிலும் ஆண்களுடன் தோளோடு தோள் நின்று பெரும் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடுகின்றாள். அவளது சுய விருப்பத்தின் பேரில் அவள் தொழில் செய்யச் செல்வதில்லை. அவள் தனக்காக உழைக்கவில்லையானால் பட்டினி கிடந்து இறந்து போக நேரிடும். அவளுக்காக செலவு செய்வதற்கு எவருமில்லை.

ஆனால், இந்த அவலநிலை இஸ்லாத்தில் இல்லை. பெண்ணின் தேவைகள் அனைத்தும் நிறைவு செய்து கொடுக்கப்படும் தனது செலவுகளுக்காக அவள் உழைக்க வேண்டிய கட்டாயமில்லை. எப்போதும் அவள் ஓர் ஆணின் பொறுப்பில் இருப்பாள். திருமணம் ஆகாதவளாக இருந்தால் அவளது தந்தையின் பொறுப்பிலும் தந்தை இல்லாத போது சகோதரனின் பொறுப்பிலும் இருப்பாள். ஒரு பெண் திருமணம் முடித்தால் அவளுக்கு செலவழிப்பது அவளது கணவனின் கடமை. கணவன் இல்லாத நிலையில் அது அவள் மகன் மீது கடமையாகும். எனவே, இஸ்லாமிய ஷரீஅத்தின்படி (நபகாத்) சட்டத்தின்படி அவளது செலவினங்களை எவராவது பொறுப்பேற்பது கடமையாகும்.

மேற்குலக சமூக அமைப்பில் இந்த ஒழுங்குமுறை கிடையாது. எனவே, அங்கு பெண்கள் தவிர்க்க முடியாத நிலையில் வீட்டில் இருந்து தொழிலுக்காக படையெடுக்கின்றார்கள். இஸ்லாமிய இல்லத்தில் ஆண் அவளின் செலவினங்களை பொறுப்பெடுக்க வேண்டும் என்கிறது அல்குர்ஆன்.

.. .. ஆண்கள் தங்கள் சொத்துக்களில் இருந்து பெண்களுக்காக செலவு செய்து வருவதனாலும் ஆண்கள் பெண்களை நிருவகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். (அல்குர்ஆன் 4:34)

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் வெறுமனே சில பொருளாதார தேடல்களை விட பெண்ணின் பெறுமானங்கள் மிக உயர்ந்தவை. அவ்வுயர் பெறுமானங்களுக்கு அவள் செயல்வடிவம் தர வேண்டும் என்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பு. சமூக எழுச்சி, சமூக நிர்மானம், இஸ்லாமிய கற்கை, மறுமைக்கான தயார்படுத்தல் என்ற இஸ்லாத்தின் விரிந்த கண்ணோட்டமே அவளது திசையை ஒழுங்கமைத்து கொடுக்கிறது.

எனினும், பெண் குறித்த மேற்கின் கண்ணோட்டம் வெறுமனே பொருளாதார மயப்படுத்தப்பட்டதாகவும், ஜடம் சார்ந்ததாகவுமே அமைந்து விட்டமை வருத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இதனால் பெண்ணிடத்தில் காணப்படும் விஷேச அன்பு, பாசம், பந்தம், நற்பண்புகள் என்ற உணர்ந்த கலைத் திறன்களால் மேற்குலகு பயன்படாமல் போயுள்ளது.

மேற்குலகப் பெண்களை தொழில்புரிய நிர்ப்பந்திக்கிறது என்று கூறும் போது இஸ்லாமியப் பெண்கள் எத்தகைய தொழில் முயற்சியிலும் ஈடுபடக் கூடாது என்ற கருத்தல்ல. இஸ்லாம் அறிமுகமான சூழலை விட இன்றைய சூழல் மாறுபட்டது. கல்வி, தொழில் என்பற்றிற்கும் ஆசிரியையாக, மாணவியாக,

கூட்டாகவும் தனித்தும் பெண்கள் வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைத் தேவைகளும் செலவினங்களும் அதிகரித்துச் செல்வதனாலும் ஆண் மட்டும் உழைத்து போதாத நிலை ஏற்பட்டு பெண்ணும் வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இஸ்லாமிய உம்மத்தின் நீண்ட கால சமூக மரபு கூட மாறி வருகின்றது.

எனவே, அவசியம் என்று கருதப்படுகின்ற போது இஸ்லாத்தின் வரையறைகளைத் தாண்டாது - இஸ்லாத்தின் ஒழுக்க மாண்புகளை மீறாமல் அவள் தொழில் புரிவதனை இஸ்லாம் ஒருபோதும் மறுக்கவில்லை. சொத்துரிமை, வியாபாரக் கொடுக்கல் வாங்கல் உரிமைகள் என்பன பெண்ணுக்கு இருப்பதால் மேற்குலகு தருவத போல் மலிவான ஒரு விளம்பர பண்டமாக அவள் அமையாது ஒழுக்கமான தொழில் முயற்சியில் ஈடுபடுவதனை இஸ்லாம் தடுக்கவில்லை.

பொதுவாக பெண்களிடமோ ஆண்களிடமோ காணப்படாத திறமை ஆற்றல் ஒரு குறித்த பெண்ணிடம் காணப்படுமாயின் அதனை பயன்படுத்த வேண்டும்.

இன்னும் எமது நாட்டில் ஆசிரியர் தொழிலில் மட்டும் பெண் ஓரளவு பங்கு கொள்கின்றாள். மற்றைய தொழில்களில் அவளது பங்கு மிகமிக சொற்பம். இது தவிர சொந்தமாக ஒரு தொழிலை நடாத்தி திறமையுடன் நிருவகிக்கும் ஒரு முஸ்லிம் பெண்ணை காண்பது மிக அரிது. அவள் காரியங்கள் அனைத்தையும் தந்தை, சகோதரன், கணவன் போன்ற யாரோ ஓர் ஆண் தான் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய நிலை. சொத்துக்களை நிர்வாகிப்பதில் இருந்து சாதாரண பயணம் செய்வது வரை (குறுகிய பயணங்கள் மட்டும், நீண்ட பயணங்களுக்கு மஹ்ரமியின் துணையன்றி பெண்கள் பயணம் செய்வது கூடாது) ஆணிலே தங்கியிருக்கும் முதிர்ச்சியற்ற ஆளுமை கொண்ட சிறுபிள்ளை தரத்திலேயே எமது நாட்டு முஸ்லிம் பெண்களில் அதிகமானோர் உளர். எனவே, ஆணே அவளுக்காக சிந்திக்கின்றான், கொடுக்கின்றான், வாங்குகின்றான்.

அந்த வகையில் சமூகத்தில் பெண்களது சமூகப் பிரவேசம் மிக சொற்ப அளவே காணப்படுகிறது. பெரும்பாலும் அவள் சமூகத்துக்கு வெளியிலே வாழ்கின்றாள். எனினும், வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் பெண்ணுக்கு உரித்தான பல கடமைகள் உண்டு. பெண்களுக்கு தொழுகைப் பயிற்சி, மருத்துவம், தாதியாக சேவை, பெண் நோயாளிகளை உடல் பரிசீலனைக்கு உட்படுத்துதல், பெண்கள் கல்லூரிகளுக்கு ஆசிரியை, பெண் உறைவிடக் காப்பாளர், பெண்களின் நலனை ஏற்படுத்தும் சமூக சேவை, சமையல் முறை, முதலுதவி, இபாதத் பற்றிய பயிற்சிகள் வழங்கல், பெண் ஜனாஸாவைக் குறிப்பாட்டல், ஆண்களிடம் கேட்க முடியாத பெண்கள் தொடர்பான மார்க்கப் பிரச்னை என்பவற்றில் அவளின் பங்களிப்பு வெளிப்பட வேண்டும். இவ்வாறு பெண்களின் மூலம் நிவர்த்திக்கப்பட வேண்டிய பல தொழிற்பாடுகள் உண்டு. அவை அவளது இயல்போடு இயைந்து போகக் கூடியவையாக இருக்க வேண்டும் என்பது கவனத்தில் கொள்ளப்படல் அவசியமாகும்.

## குடும்ப வாழ்வில் பெண்

குடும்ப வாழ்வின் மிக அடிப்படையான உறுப்பினர் பெண். இன்று பெண்கள் கல்வி கற்பது அதிகரித்துள்ளது. அதேபோல் தொழில் புரிவதும் அதிகரித்து வருகிறது. இந்த சமூக மாற்றத்தை அதன் விளைவுகளை ஆய்வுக்குபடுத்துதல் அவசியமாகும்.

பெண் அதாவது இயல்புக்கேற்ப தொழில்களை புரிய வேண்டும் எனும் போது அவளது முதன்மையான தொழில் மையம் குடும்பம் என்பது குடும்ப ஒழுங்கை சீர் செய்வதே அவளது முதன்மையான பணி

என்பதும் தெளிவாகின்றது. மனித மாண்புகளுக்கு மதிப்பளித்து உயர்ந்த விழுமியங்களோடு இளம் உள்ளங்களை (பிள்ளைகளை) வழி நடாத்திச் செல்வதே அவளத முதன்மையான கடமை. ஆண்-பெண் இணைப்புக்கள், தொடர்புகள் உறவுகள் என்பன வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவு புனிதமானவை. அந்த வகையில் பெண்களது மன உணர்வுகளும், உணர்ச்சிகளும், மென்மைத் தன்மைகளும், குடும்ப அலகுகளை கட்டியெழுப்புவதற்கான மூலக்கற்களாகும். எனவே, சமுதாய வாழ்வின் கருவியாக குடும்பம் அமைவதால் அதன் புனிதத்துவத்தை பேணவும், பாதுகாக்கவும் பெண் கடமைப்படிருக்கிறாள். இந்த புனித உறவின் மகிமையை அல்குர்ஆன் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றது.

“நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்குரிய மனைவியரை உங்களில் இருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும், உங்களுடைய அன்பையும், கருணையையும் உண்டாக்கியிருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக் கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.” (30:21)

“நபி (ஸல்) அவர்களிடம் எந்தப் பெண் சிறந்தவள் என கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் எந்தப் பெண் தன் கணவன் தன்னைப் பார்க்கும் போது அவளை மகிழ்விப்பாளோ, அவன் கட்டளையிட்டால் அவனுக்குக் கீழ்படிந்து நடப்பாளோ, தன் கற்பிலும், தன்னுடைய பொருளிலும் தன் கணவனுக்கு விருப்பமில்லாத எந்தப் போக்கையும் மேற்கொள்ள மாட்டாளோ அத்தகையவளே சிறந்தவள் என்றார்கள்.” (அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : நஸயீ)

எனவே, ஆண்களின் வாழ்க்கையில் அன்பு, அமைதி, ஆறுதல் என்று இன்பங்களை சுமந்து வரும் வசந்தத்தின் தென்றலாக மனைவி அமைந்து விடல் வேண்டும். அறிவும், அன்பும், பண்பாடும், ஒழுக்கமும் மனைவியின் முக்கிய தகுதியாகும். எனவே, அவள் தவழ்ந்து வரும் பூங்காற்றாய் ஆணின் இதயத்தில் மகிழ்ச்சிப் பூக்களை தூவ வேண்டும். ஆணும் அவ்வாறே அவளை மகிழ்விக்க வேண்டும். இல்லறம்இன்பச் சோலையாகும்.

குடும்பத்தின் முக்கியமான பணி முஸ்லிம் பிரஜையாக வாழவைப்பது. இது ஒரு ஆணினால் மட்டும் முடியாது. இதற்கு பெண் கல்வித் தகைமை உடையவர்களாக இருக்க வேண்டும். தாய்க்கு எத்தகைய அறிவும் இல்லாத போது அவளிடம் பால் குடித்து வளரும் குழந்தையும் அதேநிலையை அடையும். எனவே, குடும்பத்தின் பணி பின்வருமாறு அமைதல் வேண்டும்.

- அறிவை வழங்கல்
- திறன்களை வளர்த்தல்
- உணர்வுகளைச் செம்மைப்படுத்துதல்

“தாயின் மடியே முதற்பள்ளி” என்பதால் அவள் அறிவை வழங்கி திறன்களை குழந்தையிடம் வளர்க்க வேண்டும். உணர்வுகளை செம்மைப்படுத்த வேண்டும். இந்த வகையில் இஸ்லாம் குடும்பத்தின் உள்ளே உள்ள பொறுப்பை அதிகளவு பெண்ணிடம் எதிர்பார்க்கிறது. ஒரு முஸ்லிம் தாயாக இருந்து கொண்டு குழந்தைகளை பெற்றெடுத்தல், அவற்றுக்கு பாலூட்டி யோசனை வழங்குதல் என்ற இயல்பான முதன்மை தொழிற்பாடுகளை அவள் மேற்கொள்ள வேண்டும். ஆனால், தனது உடல் கவர்ச்சி அல்லது தான் புரிந்து விடும் தொழில்கள் என்பவற்றுக்காக ஒரு முஸ்லிம் பெண் கூட தனது முக்கிய பணியை இன்று புறக்கணிக்க முனைவது கவலைக்குரியதே. தொழில் புரியும் சில பெண்கள் இதற்காக தம் குழந்தை பெற்றெடுப்பதை கூட விரும்புவதில்லை. கணவனிடம் விருப்பம் இதற்கு நேர்மாறாக அமையும் போது விவாகரத்து வரை பிரச்சினை விரிந்து செல்கிறது.

எனவே, குடும்பம் என்ற நிறுவனத்தில் பெண்ணின் அடுத்த முக்கிய பங்காளி கணவன் என்ற வகையில் இந்த உன்னத நிறுவனததை ஒழுங்கமைத்துக் கொள்ள அவள். பூரண பரஸ்பர ஒத்துழைப்பை அவள் கணவனுக்கு வழங்க வேண்டும். இத்தகைய தூய ஒத்துழைப்புகளின் பின்னணியில் எழுச்சி பெறும் குடும்ப அமைப்புக்களில் எத்தகைய பிரச்சினைகளும் குழப்பங்களும் தோன்றுவதில்லை.

"உலகத்து இன்பங்களிலே சிறந்தது ஸாலிஹான (நல்ல) மனைவியாவாள்." (ஆதாரம் : முஸ்லிம்)

"பெண் தனது கணவனது வீட்டின் விசயங்களுக்கு பொறுப்பானவள். அவளது பொறுப்புப் பற்றி (மறுமையில்) அவள் விசாரிக்கப்படுவாள்." (ஆதாரம் : புகாரீ)

என்ற நபிமொழிகள் ஆழமாக நோக்கப்படக் கூடியவைகள். துன்பங்கள், துயரங்கள், இடையூறுகளின் போது பொறுமையை மேற்கொள்ளும் உயர்ந்த பக்குவம் முஸ்லிம் பெண்களிடம் கட்டாயம் இருக்க வேண்டும். கஷ்டங்களுக்கு மத்தியில் உழைக்கும் கணவனுக்கும், தனது அன்புக் குழந்தைகளுக்கும் இரக்கம் காட்டும் பெண் தான் இன்று எமது அவசரத் தேவையாக உள்ளது. ஆனால், தற்கால பெண்களிடத்தில் இவ்வுயரிய ஒத்துழைப்பை காண்பது மிக அரிதாகி விட்டது. மேற்குலகை கண்மூடித்தனமாக பின்பற்றும் இவர்கள் தம்மை ஆடைகளாலும், ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்றே பெரிதும் விரும்புகின்றனர். இதனால், தன்னந்தனியே வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டு குடும்பத்தைச் சீரழிக்கின்றனர். தனது உடலின் கவர்ச்சி மிக்க வெளித்தோற்றம் பற்றி அடிக்கடி சிந்திப்பதால் இந்நிலை ஏற்படுகின்றது.

எமது சமூக சூழலில் பெண்களின் நிலையை நோக்கும் போது பரிதாபகரமாகவே உள்ளது. அதுவும் மார்க்க விசயங்களைப் பார்க்கும் போது மிகவும் கவலையளிக்கிறது. இஸ்லாமிய சமூக சிந்தனை, பொருளியல் ஒழுங்குகள், அரசியல் சிந்தனை என்பன எவ்வாறிருப்பினும் மிகச் சாதாரண ஒரு முஸ்லிம் பெண்ணாக வாழ்வதற்குத் தேவையான ஆகக் குறைந்த மார்க்க அறிவு இல்லாதவர்கள் கூட நம்மிடையே ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இஸ்லாமிய ஆளுமையை அவர்கள் வளர்த்தக் கொள்ளவும் முயற்சிப்பதில்லை. அன்றாட வீட்டு வேலைகளில் ஆழ்ந்து கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் ஏறத்தாழ ஒரு வேலைக்காரியைப் போன்றே உழைத்து வீட்டு வேலைகள் தரும் பிரச்னைகளில் மூழ்கிப் போவதே எமது சமூகப் பெண்களின் அதிகமானோரின் தலைவிதியாகிப் போயுள்ளமை கவலைப்படத்தக்கதொரு உண்மையாகும்.

இந்தப் பின்னணியிலேயே அவள் சமூகப் பிரக்ஞை அற்றவளாக வாழ்கிறாள். சேலை,நகை, வீடு, ஆடம்பரப் பொருட்கள், தனது பிள்ளைகளின் திருமணம் இவற்றுக்கு வெளியே சிந்திக்கத் தெரியாது. அவற்றிற்காகவே சிந்தித்து அழுது, ஏங்கி, கணவனோடுபோராடி உறவினர்களோடும் அயல் வீட்டாரோடும் பொறாமைகளை வளர்த்துக் கொண்டு வாழ்ந்து மடியும் அற்ப வாழ்க்கையை பெண்ணின் வாழ்வாகிப் போயுள்ளமை எமது சமூகத்தின் துர்ப்பாகிய நிலை. அவள் தனது கண்ணீராலும், அழகாலும், தனது சாதுரியப் புத்தியாலும் சில விசயங்களை சாதிக்க முனைகிறாள்.

குடும்ப நிறுவனத்தின் பொறுப்பாளியாக அதனை பொறுப்போடும் நன்கு திட்டமிட்டும் நடாத்தும் நிலையன்றி இறுகிப் போன்தொரு சிறைவாழ்வாக பெண்ணுக்கு குடும்ப வாழ்க்கை மாறியுள்ளமை, அவள் மீது இழைக்கப்படும் மிகப் பெரிய அநீதியாகும். ஆண் பணம் கொடுத்து (வரதட்சணை, சீதனம்) வாங்கப்படும் பெறுமதியான ஒரு பொருளாகி எவ்வளவு அதிகம் பொருள் (பணம்) கொடுக்க முடியுமோ அந்தளவுக்கு அந்தஸ்தும் வசதியும் உள்ள ஆணை பெற முடியும் என்ற இன்றைய சமூக ஒழுங்கு பெண்ணை மண வாழ்வுக்காக ஏங்குபவளாக மாற்றியுள்ளது.

எனவே, தனது முழுவாழ்வையும் பாதிக்கும் திருமணத்தின் போது கூட அவள் தாயும், தந்தையும் தேர்ந்தெடுப்பவருக்கு சமூகத்தை நீட்டி தன்னை தாரை வார்த்து, "கல்லானாலும் கணவன்

புல்லானாலும் புருஷன்" என்ற வாழ்வு நிலை அவளுக்கு தவிர்க்க முடியாததாகப் போயுள்ளது. இது அவள் மீது இழைக்கப்படும் இன்னொரு அநீதியாகும்.

அதிகமான குடும்பங்களில் கணவன் வெறுமனே குடும்பத்தில் பொருளாதார செலவினங்களுக்காக மட்டும் பொறுப்பானவள் என்பதைப் போல நடந்து கொள்கின்றான். தமது சமூகத்தில் எத்தனை கணவன்மார் தமது மனைவியரின் இஸ்லாமிய வாழ்வு குறித்து சிந்திக்கிறார்கள் என்பது கேள்விக்குறியே. அவள் சமைக்கும் ருசியான உணவை உண்டு அவளோடு ஒன்றாக உறங்கி அவள் துவைத்து தரும் ஆடைகளை அணிந்து வாழும் கணவன்மார்கள் அவளது மறுமை வாழ்வு பற்றி சிந்திப்பதும் அவசியமாகும். இதனால் சமூகத்தில் மாற்றம் ஏற்படுவதோடு பெண்கள் பற்றிய பாரம்பரிய உழுத்துப் போன கற்பிதங்களும் மறைந்து போகும்.

தனது மனைவியும் மார்க்க விசயங்களில் பங்கு கொள்ள வேண்டும் என கணவன் சற்று முற்போக்காக சிந்திக்க வேண்டும். இதற்காக சில ஒழுங்குகளை அவளுக்கு செய்து கொடுக்க வேண்டும. பெண், தனது நேரத்தை கவனமாக திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எதையும் சாதிக்க வேண்டும் என்ற உறுதியும் திடமும் இருக்குமானால் நிச்சயமாக சாதிக்க முடியும்.

அன்று மனைவியாக இருந்து கொண்டே போர்க்களத்தில் மருத்துவம் செய்த ஸஹாபியப் பெண்களும் பெரும் பெரும் அறிவு இயக்கத்தை தோற்றுவித்த பெண்களுக்கும் இதே காலமும் நேரமும் தான் இருந்தன. எனவே, நேரங்களை மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு கணிசமான அளவு நேரத்தைப் பயன்படுத்தலாம். முஸ்லிம் பெண் முன்னேறவும் அவளால் சமூகமும் பயனடையவும் வேண்டுமாயின் அவள் பின்னோக்கிப் போக வேண்டும். அதாவது, அவள் நபித்தோழர்கள், தாபியீன்கள் காலத்தை நோக்கி மீள வேண்டும். இதனால் பிள்ளைகளின் தொந்தரவுகளோடு, சமையலறை வேலைகளோடு துணிமணிகளை துவைப்பதோடும் மட்டுமான அவளத பரிதாப நிலை மாற்றமடையும்.

## சமூக நடவடிக்கைகள்

பெண் பற்றிய இஸ்லாமிய சிந்தனையின் அடுத்த முக்கியமான விசயம் சமூக நடவடிக்கைகளில் அவளின் ஈடுபாடும் பற்றியதாகும். அவள் நற்பணிகளில் ஈடுபடும் போது நிச்சயமாக அல்லாஹ் கூலி கொடுக்கிறான் என்பதை முன்னர் கண்டோம். சமூக வேலையை அவள் மீது கடமையாக மட்டுமே அல்லாஹ் ஆக்கவில்லை. வைத்தியம், வியாபாரம், தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள் போன்றவற்றில் அவள் ஈடுபடுவதை இஸ்லாம் தடுக்கவில்லை என்பதை முன்னைய பகுதியில் நோக்கினோம். எனவே. அவள் யுத்தங்களில் கலந்து கொள்வதை கூட மறுக்கவில்லை.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் பெண்கள் கலந்து கொள்ளாத எந்த யுத்தமும் நடைபெறவில்லை எனும் அளவிற்கு ஜிஹாதில் அவர்களது பங்களிப்பு காணப்பட்டது. அங்கே அவர்கள் காயப்பட்டவர்களுக்கு வைத்தியம் பார்த்தல், முதலுதவி செய்தல், நீர்வழங்கல் போன்ற பல சேவைகளைப் போர்க்களத்தில் செய்ததோடு, சில சந்தர்ப்பங்களில் நேரடி யுத்தத்திலும் ஈடுபட்டனர். ஸஹாபாக்கள் காலத்திலும் பிற்பட்ட காலத்திலும் பெண்கள் யுத்தத்திற்கு சென்றிருக்கின்றார்கள். கடற்படையணியில் கூட பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

அடுத்து, ஐந்து நேரத் தொழுகைகள், ஜு ம்ஆ, இரு பெருநாள் தொழுகைகள் போன்ற சமூக வடிவம் கொண்ட வணக்க வழிபாடுகளில் பெண்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காலத்திலும், பிற்பட்ட

காலங்களிலும் அவர்கள் தொடர்ந்து கலந்து கொண்டுள்ளனர். பெண்கள் மீதும் இஸ்லாம் இவற்றை கடமையாக்கவில்லை என்பது மட்டும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காலத்திலும், ஸஹாபாக்கள், தாபியீன்கள் காலத்திலும், அனைத்து வகை சமூக நடவடிக்கைகளும் பெண்கள் நல்ல சமூக ஈடுபாடு கொண்டவர்களாகவே இருந்தனர் என்பது, வரலாற்றை நோக்கும் போது மிகத் தெளிவாக விளங்கும். ஒருபோதும் பெண்கள் அக்காலப்பிரிவில் சமூக பிரக்ஞை அற்றவர்களாக அது பற்றிய ஏந்த அறிவும் அற்றவர்களாக முடக்கி வைக்கப்படவேயில்லை. அன்று அவர்கள் வீட்டு வேலைகளோடு மட்டும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களாக காணப்படவில்லை. சமூக சேவை அல்லது தொழில் என்று வரும் போது அங்கே பெண் தனித்திருப்பது அபாயகரமானது. “ஒருநாள் நடக்கும் தூரத்திற்கு அதிகமாக ஒரு பெண் மஹ்ரமி இன்றி பிரயாணம் செய்வது ஆகாது” (புகாரீ) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சமூக சேவை வெளிநாட்டு தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்களின் கவனத்தை இந்த நபிமொழிகள் ஈர்க்க வேண்டும். “அந்நிய ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தனித்திருந்தால் அங்கே மூன்றாவதாக ஷைத்தான் வந்து விடுகின்றான்.”

## ஆடை

---

சமூக உறவுகளை மேற்கொண்டு சமூகப் பணியாற்ற வருகின்ற போது இஸ்லாம் பெண்களுக்கு சில ஒழுக்க விசயங்களையும் ஆடைமுறைகளையும் அறிமுகப்படுத்துகிறது. ஒரு பெண் தன் இல்லத்தில் இருந்த வெளியே செல்லும் போது முகம், முன்கைகள் தவிர்ந்த மற்றைய உடல் முழுவதையும், அணி அலங்காரங்களையும் பின்வரும் நிபந்தனைக்கு அமைய மறைத்துக் கொள்வது அவள் மீது கடமையாக்கப்பட்டது (வாஜிபு) என முஹம்மது நஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

- வெளியே தெரிவதற்கு அனுமதிக்கப்பட்ட பாகங்களை தவிர்ந்த (முகம், முன்கை) உடலின் அனைத்து பகுதிகளையும் மறைத்தல்.
- மறைப்பதற்கு உபயோகிக்கப்படும் துணிமணிகள் கவர்ச்சியற்றவைகளாய் இருத்தல்
- மென்மை அல்லாத தடித்த துணியாய் இருத்தல் வேண்டும்.
- இறுக்கமில்லாத தளர்வானதாய் இருத்தல்
- பிறரைக் கவரும் நறுமணம் ஊட்டப்பட்டதாய் இல்லாதிருத்தல்
- ஆண்கள் அணியும் ஆடைக்கு ஒப்ப இல்லாதிருத்தல்
- அன்னிய மாதர் அணியும் ஆடை போன்று இல்லாதிருத்தல்
- பெருமை தரும் ஆடை இல்லாதிருத்தல் வேண்டும்

பெண்கள் முகத்தை மூடுமாறு நிர்ப்பந்திப்பது தவறானது ஆகும். “பார்வையைத் தாழ்த்துங்கள்” எனும் போது மூடியில்லாத நிலையில் தான் அது என்பதும் “உங்கள் அலங்காரங்களை அதனின்றும் வெளியே தெரியாதவற்றைத் தவிர” (அல் குர்ஆன்) எனும் போதும் முகம் முன்கைகள் என்பவற்றை மறைக்க வேண்டியதில்லை என்பது புலனாகிறது. அத்தோடு குழைந்து குழைந்து பேசுதல் அரை நிர்வாணமான

மெல்லிய ஆடை அணிதல் என்பன கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“மறுமை நாள் நெருங்கும் போது சில பெண்கள் தோன்றுவாாகள். அவர்கள் ஆடை அணிந்தும் இருப்பார்கள், நிர்வாணமாகவும் இருப்பார்கள்.” (புகாரீ, முஸ்லிம்)

பெண், சமூகத்திற்கு வரும் போது கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றில் பங்கு கொள்வதோடு அவள் தனது ஒழுக்க சீலங்ள் என்பவற்றை கண்டிப்பாக பேணிக் கொள்ள வேண்டும். அன்னிய ஆனுடம் தனித்திருத்தல், குழைந்து பேசுதல், தொட்டுப் பழகுதல், விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடும். நபி (ஸல்) அவர்க்ள பெண்களிடத்தில் ‘பைஅத்’ பெறும் போது கூட அவர்களைத் தொடவில்லை. எனவே, இவ்வாறான சமூகக் களத்தில் நுழையும் போது இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய அறிவு ஞானத்துடன் ஒழுக்க விழுமியங்களுடனும் எமது பெண்கள் தமது சமூக தொடர்புகளை ஆக்கிக் கொள்வார்களேயானால் அவர்கள் தனிமனிதர்களை உருவாக்கி - அதனூடாக முஸ்லிம் வீட்டை நிர்மாணித்து - இஸ்லாமிய சமூகத்தை கட்டியெழுப்பி - அதனூடாக இஸ்லாமிய கிலாபத் உருவாக்கத்துக்கும் மிகப் பெரும் பங்களிப்பு செய்யலாம்.